**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# புதிய நாடாளுமன்றத்தில் தமிழக செங்கோல்

## பண்டித நேருவிடம் வழங்கப்பட்டது | மத்திய அமைச்சர் அமித் ஷா

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, மே 24:** ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவுக்கு அதிகாரப் பரிமாற்றம் நடந்ததை அடையாளப்படுத்தும் வகையில் முதல் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேருவிடம் 1947-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட புனித 'செங்கோல்', புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நிறுவப்படும் என மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா புதன்கிழமை தெரிவித்தார்.

இந்தச் செங்கோல் தமிழகத்தைச் சேர்ந்த திருவாவடுதுறை ஆதீனத்தின் உதவியால் தயாரிக்கப்பட்டது. உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில் (அலாகாபாத்) உள்ள நேரு அருங்காட்சியகத்தில் இந்தச் செங்கோல் வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மத்திய அமைச்சர் அமித் ஷா கூறியதாவது:

'1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14-ஆம் தேதி இரவு இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரான ராஜேந்திர பிரசாத் மற்றும் பலர் முன்னிலையில், முதல் பிரதமர் பண்டித நேருவிடம் 'செங்கோல்' வழங்கப்பட்டது.

நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகியும் நாட்டு மக்களுக்கு இதுகுறித்து அறியவைக்கப்படவில்லை. நாட்டில் அவ்வப்போது நடைபெறும் அதிகாரப் பரிமாற்றம் என்பது வெறும் கைகுலுக்கல் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவது மட்டுமல்ல; அது, உள்ளூர் பாரம்பரிய மரபுகளுடன் இணைந்திருக்க வேண்டும்.

விடுதலையின் அமுதப் பெருவிழாவை முன்னிட்டு இந்தச் செங்கோலை தேசிய சின்னமாக புதிய நாடாளுமன்றத்தில் நிறுவ பிரதமர் மோடி முடிவெடுத்துள்ளார். இது வரும் 28-ஆம் தேதி புதிய நாடாளுமன்றத்தில் மக்களவைத் தலைவர் இருக்கைக்கு அருகே வைக்கப்படும்.



**சோழ பாரம்பரியம்:** இந்தச் செங்கோல் தற்போது பிரயாக்ராஜ் நேரு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செங்கோல் குறித்து காஞ்சி 68-ஆவது பீடாதிபதி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் (பரமாசாரியர்) 1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதி சைவ இலக்கிய நிகழ்ச்சியில் நினைவுகூர்ந்து பேசியதை அவரது சீடர் தேவார முனைவர் சுப்பிரமணியம் என்பவர் தனது புத்தகத்தில் குறிப்பிட்டார்.

சோழ பாரம்பரியத்தின் வளையாத செங்கோலைப் பராமரிக்காதது குறித்தும், இதை பாடப் புத்தகத்தில் வைக்காதது குறித்தும் காஞ்சி பீடாதிபதி பரமாசாரியர் குறிப்பிட்டுள்ளார்.

இது தமிழக ஊடகங்களில் வெளியாக, பிரதமர் மோடி செங்கோலின் சரித்திரத்தில் ஈர்க்கப்பட்டார். இந்தச் செங்கோலை வழங்கிய திருவாவடுதுறை ஆதீனம், இதை உருவாக்கிய உம்மிடி பங்காரு எத்திராஜுலு (90), உம்மிடி சுதாகர் செட்டி சகோதரர்கள், நூல் ஆசிரியர் சுப்பிரமணியம் ஆகியோர் கௌரவிக்கப்படுவார்கள்.

பிரயாக்ராஜில் இருந்து கொண்டு வரப்படும் செங்கோலை கங்கை நீரில் சுத்தப்படுத்தி மங்கள வாத்தியங்களுடன் கோளறு பதிகத்தில் இடம் பெற்றுள்ள 'அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே' என்ற பாடல் வரிகளுடன் செங்கோலைப் பெற்று புதிய நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி நிறுவுவார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு புதிய நாடாளுமன்றக் கட்டடம் ஓர் எடுத்துக்காட்டு. இந்த விழாவில் 6,000 தொழிலாளர்களை பிரதமர் கௌரவிப்பார்.

இந்த கட்டடத் திறப்பு விழாவுக்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பியுள்ளோம் என்றார் அமித் ஷா.

மத்திய கலாசாரத் துறை அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி, செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்குர் ஆகியோர் உடனிருந்தனர்.

## இந்து சமய அறநிலையத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில்...

தமிழக சட்டப்பேரவையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தாக்கல் செய்த 2021-2022-ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் பண்டித நேருவிடம் புனித செங்கோலை திருவாவடுதுறை இளைய தம்பிரான் வழங்கியது இடம்பெற்றுள்ளது. புனித செங்கோல் குறித்து அமைச்சர் அமித் ஷா பேட்டி அளித்தபோது, காணொலி திரையில் இந்த விவரம் சுட்டிக் காட்டப்பட்டது.

## மூதறிஞர் ராஜாஜியின் ஆலோசனையுடன்...





தமிழகத்திலிருந்து வழங்கப்பட்ட செங்கோல். (உள்படம்) மேல்பகுதியில் வடிவமைக்கப்பட்டுள்ள நந்தி உருவம். (வலது) திருவாவடுதுறை ஆதீனத்தின் குமாரசாமி தம்பிரான் வழங்கிய செங்கோலுடன் பண்டித நேரு.

நாடு சுதந்திரம் அடைந்தபோது இந்திய பாரம்பரிய நெறிமுறைகளுடன் அதிகாரப் பரிமாற்ற நிகழ்வு குறித்து பிரிட்டிஷ் அரசின் கடைசி வைஸ்ராய் மவுண்ட்பேட்டன் பிரபு கேட்க, ஜவாஹர்லால் நேரு, மூதறிஞர் ராஜாஜியுடன் ஆலோசனை நடத்தினார். சோழ மன்னர்கள் அதிகார பரிமாற்றத்துக்கு புனித அடையாளமாக செங்கோல் பரிமாற்றம் செய்த அதே பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்க ராஜாஜி ஆலோசனை கூறினார்.

மேலும், ராஜாஜி உடனே திருவாவடுதுறை ஆதீனத்தைத் தொடர்பு கொண்டு 'தங்கள் திருக்கரங்களால் செங்கோல் கொடுத்து ஆசி நல்க வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார். குருமகா சன்னிதானம் ஆதீனக் கட்டளைத் தம்பிரான் ஸ்ரீமத் திருவதிகை குமாரசாமி தம்பிரானையும் ஓதுவார் ஒருவரையும், ஆதீன நாதஸ்வர வித்வான் 'நாதஸ்வர சக்கரவர்த்தி' திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையையும் தில்லிக்குத் தனிவிமானத்தில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார்கள்.

சைவச்சின்னம் பொறித்த தங்கச் செங்கோல் ஒன்று செய்து திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டது. புறப்படும்போது ஓதுவார் பணிவுடன் ஆதீன கர்த்தரான குருமகாசன்னிதானத்தைப் பார்த்து, அரசு விழாவில் தான் எந்தத் திருமுறைப்பாடல் பாடுவது எனக் கேட்க, 'கோளறு பதிகம் பாடுக' என்று சன்னிதானம் கட்டளையிட்டார்.

1947 ஆகஸ்ட் 14-ஆம் நாள் நள்ளிரவில், மவுண்ட்பேட்டனிடம் இருந்து செங்கோலை, திருவாவடுதுறை இளைய தம்பிரான் முதலில் பெற்றார். செங்கோலுக்குப் புனித நீர் தெளித்து ஓதுவாமூர்த்தி, 'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்' என்று தொடங்குகிற திருஞான சம்பந்தரின் கோளறு பதிகத்தை 'அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே' என்று முழுமையாகப் பாடி ஆசிர்வதித்து செங்கோலை ஜவாஹர்லால் நேருவிடம் வழங்கினார்.

**அடையாளச் சின்னம்:** திருஞானசம்பந்தர் எழுதிய கோளறு பதிகம் குறித்தும் மத்திய அமைச்சர் அமித் ஷாவின் செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்கப்பட்டது. தமிழில் 'கோள்' என்றால் கிரகம்; 'அறு' என்றால் நீக்குவது. 'கோளறு' என்றால் கிரகங்களின் தீய விளைவுகளை அழித்தல். 'பதிகம்' என்பது பொதுவாக 10 பாடல்களைக் கொண்ட சிவபெருமானை போற்றும் பாடலாகும்.

பிரிட்டன் அரசர்கள், அரசிகள் முடிசூட்டும் தங்கக் கோளத்தின் மேல் சிலுவை நிறுவப்பட்டுள்ளது. கடவுளின் சக்தி பெறப்படுவதைக் காட்டும்விதமாக 1661-ஆம் ஆண்டு 2-ஆம் சார்லஸ் முடிசூட்டு விழாவுக்காக பிரிட்டன் ராணியின் சாவரின் ஆர்ப் உருவாக்கப்பட்டது. 363 ஆண்டுகளுக்கு பிறகும் இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

இப்படி பல்வேறு நாடுகளின் ஆட்சி அடையாள சின்னம் குறித்தும், சோழ பேரரசு குறித்த தகவல்களும் மத்திய அரசின் விளக்கக் காட்சிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக எஸ்.வைத்தியநாதன் நியமனம்

**சென்னை, மே 24:** சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய பொறுப்பு தலைமை நீதிபதியாக எஸ்.வைத்தியநாதனை நியமித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற பொறுப்புத் தலைமை நீதிபதியாக இருந்த டி.ராஜா புதன்கிழமையுடன் ஓய்வு பெற்றார். இதையடுத்து, சென்னை உயர்நீதிமன்றத்தின் 2-ஆவது மூத்த நீதிபதியான எஸ்.வைத்தியநாதனை பொறுப்புத் தலைமை நீதிபதியாக நியமித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார். வியாழக்கிழமை முதல், நீதிபதி வைத்தியநாதன் தலைமை நீதிபதி பணிகளை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த 1962-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கோயம்புத்தூரில் பிறந்த நீதிபதி வைத்தியநாதன், பள்ளி மற்றும் சட்டப் படிப்பை சென்னையில் முடித்துள்ளார். 1986-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கிய அவர், 2015-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இதனிடையே, மும்பை உயர்நீதிமன்ற பொறுப்புத் தலைமை நீதிபதியாக உள்ள கங்கா பூர்வாலாவை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க உச்சநீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்தது. அந்தப் பரிந்துரை மீது மத்திய அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை.

# சிங்கப்பூர் நிறுவனங்களுடன் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

**சென்னை, மே 24:** சிங்கப்பூர் நிறுவனங்களுடன் தமிழக அரசு ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

சிங்கப்பூரில் புதன்கிழமை நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

**அவை குறித்த விவரம்:**

1.தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கும், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த தொழில் வர்த்தக சம்மேளனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு, பல்கலைக்கழகங்களுக்கு இடையே ஒத்துழைப்பு, அரசு, தனியார் துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பு, தொழில் துறைகளின் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு ஆதரவு போன்ற அம்சங்களை மையப்படுத்தி இருக்கும்.

2.சிங்கப்பூர் -இந்தியா கூட்டாண்மை அலுவலகம் மற்றும் மாநில அரசின் சிப்காட் நிறுவனத்துக்கு இடையே பொருளாதார மற்றும் வளர்ச்சியில் ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

3.சிங்கப்பூர்- இந்தியா கூட்டாண்மை அலுவலகத்துக்கும், தமிழ்நாட்டின் புதுமுக தொழில்கள் இயக்கத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம், தொழிற்கல்வி, தொழில் நுட்ப தொடர் கல்விக்கான திறன் மேம்பாடு, ஸ்டார்ட்-அப் பொருளாதார செயல்பாடுகளை மேம்படுத்துவது போன்ற பணிகள் எளிதாக்கப்படும்.

4.தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கும், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த எச்-பி நிறுவனத்துக்கும் இடையே ரூ.312 கோடி முதலீட்டில், 700 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம், மின்னணு பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்.

5.தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கும், சிங்கப்பூர் தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு பல்கலைக்கழகத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம், தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த பாடத் திட்டம், பாடமேம்பாட்டுக்கான பணிகள் பகிர்ந்து கொள்ளப்படும்.

6.தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துக்கும், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கல்விச் சேவைகள் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் தொழிற்சாலைக்குத் தேவையான திறன் பள்ளிகளை அமைத்தல் மற்றும் மேலாண்மை செய்வதற்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வகை செய்கிறது.

நிகழ்ச்சியில், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சிங்கப்பூர் போக்குவரத்து, வர்த்தக அமைச்சர் எஸ்.ஈஸ்வரன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பம்



சிங்கப்பூரில் புதன்கிழமை நடைபெற்ற தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம், சிங்கப்பூர் மின்னணு உதிரிபாகங்கள் தயாரிப்பு நிறுவனம் இடையே பரிமாறிக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம். உடன் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சிங்கப்பூர் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன், தமிழக தலைமைச் செயலர் வெ.இறையன்பு, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, சிங்கப்பூர் நாட்டுக்கான இந்தியத் தூதர் பெரியசாமி குமரன்.

## முதலீட்டாளர்களுக்கு அழைப்பு

சிங்கப்பூரைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகளவில் முதலீடுகளைச் செய்ய வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்தார்.

சிங்கப்பூரில் புதன்கிழமை நடைபெற்ற தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் அவர் பேசியதாவது: சிங்கப்பூரை நாங்கள் வெளிநாடாக கருதுவதில்லை. ஏனென்றால், எங்களது தாய்மொழியாம் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்கும் நாடு சிங்கப்பூர். சிங்கப்பூருக்கும், தமிழ்நாட்டுக்கும் தொன்றுதொட்டே சிறப்பான உறவு உள்ளது. சிங்கப்பூரின் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தொடக்கநிலை முதல் இளநிலை கல்லூரி வரை தமிழ் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படுகிறது என்பதே இனிய செய்தி.

இந்தியாவின் பொருளாதாரத்தைக் கட்டமைப்பதில் முக்கியப் பங்கை தமிழ்நாடு வகித்து வருகிறது. வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை எட்ட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம். இந்த நல்ல தருணத்தில், சிங்கப்பூரைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகளவில் முதலீடுகளைச் செய்ய வேண்டும்.

தமிழகத்தில் நிதிசார் தொழில்நுட்ப நகரத்தை அமைக்க சிங்கப்பூரைச் சேர்ந்தவர்களின் ஆற்றலும், அனுபவமும் எங்களுக்கு மிகவும் தேவை. தொழில் பூங்காக்கள் மேம்பாடு, தொழில் நகரியங்கள், தொழில் பெருவழித் தடங்கள், துறைமுகங்கள் மேம்பாடு, நகர்ப்புற உள்கட்டமைப்பு, கழிவு நீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை, கடல்நீரை நன்னீராக்கும் திட்டம், சுற்றுலாத் திட்டங்கள் போன்றவற்றில் சிங்கப்பூரின் ஒத்துழைப்பு தமிழ்நாட்டுக்கு மிகவும் அவசியம். எங்களின் முன்னேற்றப் பயணத்தில் இணைந்து அதற்கான திட்டங்களைச் செயல்படுத்த சிறப்பான பங்குதாரராக சிங்கப்பூர் கைகோக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் முதலீட்டுக்கு உகந்த சூழல் மிகப் பிரகாசமாக இருக்கிறது. அடுத்த ஆண்டில், சென்னையில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றார் முதல்வர்.

# சென்னையில் தனி நபர் குப்பை கொட்டும் அளவு 689 கிராமாக உயர்வு: மாநகராட்சி ஆணையர்

**சென்னை, மே 24:** சென்னை மாநகராட்சி பகுதியில் தனி நபர் குப்பை கொட்டும் அளவு 689 கிராமாக உயர்ந்துள்ளதாக மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சிக்குள்பட்ட பெருங்குடி குப்பைக் கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயிரி அகழ்ந்தெடுத்தல் பணிகள் மற்றும்சேத்துப்பட்டில் உள்ள உயிரி எரிவாயு மையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுமேற்கொண்ட அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னை மாநகராட்சி பகுதியில் 2000-ஆம் ஆண்டில் 2,500 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டன. தற்போது தினமும் சுமார் 5,500 டன் குப்பைகள் சேகரமாகின்றன. இந்தக் குப்பைகள் பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்படுகின்றன.

சுமார் 225 ஏக்கர் பரப்பில் உள்ள பெருங்குடியில் இதுவரை 34.02 லட்சம் கன மீட்டர் அளவில் குப்பைகள் உள்ளன.

இந்தக் குப்பைகள் தற்போது உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் களையப்பட்டு அதிலிருந்து கல், மணல், இரும்பு, மரக்கட்டைகள், கண்ணாடி, ரப்பர் மற்றும் நெகிழிப் பொருள்கள் தனித்தனியாக பிரித்தெடுத்து மறுசுழற்சி செய்யப்படுகின்றன.

இந்தப் பணி ரூ.350.65 கோடியில் 11 உயிரி அகழ்ந்தெடுக்கும் மையங்கள் மூலம் செயல்பட்டு வருகிறது. இதை முழுமையாக அகற்றி அந்தப் பகுதியில் பூங்கா அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது போன்று கொடுங்கையூரிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

சென்னையில் ஒரு நபர் நாளொன்றுக்கு 500 கிராம் குப்பையைக் கொட்டி வந்த நிலையில் தற்போது 689 கிராமாக உயர்ந்துள்ளது.

புதிதாக வரும் குப்பைகள் சேத்துப்பட்டில் உள்ள பழைய தார்க் கலவை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

இங்கு தனியார் பங்களிப்புடன் 100 மெட்ரிக் டன் திறன் கொண்ட ஈரக்கழிவுகளிலிருந்து உயிரி எரிவாயு தயாரிக்கப்படுகிறது. இதுவரை 36,726 மெட்ரிக் டன் கழிவுகளைக் கொண்டு 665.14 மெட்ரிக் டன் உயிரி எரிவாயு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று மாநகராட்சி பல் வேறு நடவடிக்கை மேற்கொண்டாலும் பொதுமக்கள் குப்பைகள் மற்றும் கட்டடக் கழிவுகளை கால்வாய் போன்ற இடங்களில் கொட்டுவதை தவிர்க்க வேண்டும்.

மேலும் இந்தப் பணிகளை ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் விரைந்து முடிக்க வேண்டும் என்றார் அவர்.

ஆய்வின்போது, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், தெற்கு வட்டாரத் துணை ஆணையர் எம்.பி.அமித், தலைமை பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என்.மகேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



சென்னை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயிரி அகழ்ந்தெடுத்தல் பணியை புதன்கிழமை பார்வையிட்ட மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன். உடன், கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என்.மகேசன்.

# 'க்ரெயின்ஸ்' செயலி: அரசு அலுவலர்களுக்கு பயிற்சி

**சென்னை, மே 24:** விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களின் பரப்பை துல்லியமாகக் கணக்கிட தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ள 'க்ரெயின்ஸ்' செயலி குறித்து பல்வேறு துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண், தோட்டக்கலை, வேளாண்பொறியியல், கூட்டுறவு, வருவாய் உள்பட 13-க்கும் மேற்பட்ட துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப் பலன்களை விவசாயிகள் எளிதில் பெறும் வகையில் 'க்ரெயின்ஸ்' செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலியை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்த பயிற்சி சென்னை, அண்ணா நிர்வாக மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் மே 22-இல் நடைபெற்றது.

பயிற்சியில், 35 மாவட்டங்களிலிருந்து வருவாய்த்துறை, வேளாண்துறை, மாவட்ட இ-சேவை சார்ந்த 114 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சி பெற்ற 114 அலுவலர்கள் மாவட்ட அளவில் தலைமைப் பயிற்சியாளராக செயல்படுவார்கள். இவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம

நிர்வாக அலுவலர்கள், வேளாண், தோட்டக்கலை உதவி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிப்பார்கள். திட்டத்தின் முக்கியத்துவத்தை வேளாண் இயக்கக வேளாண் துணை இயக்குநர் பெ.வெங்கடாசலபதி, இச்செயலியை பயன்படுத்தும் முறை குறித்து திட்ட இயக்குநர் ம.ஜெயச்சந்திரன் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

பயிற்சியில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலர் சி.சமயமூர்த்தி, நில நிர்வாக ஆணையர் ந.நாகராஜன், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இயக்குநர் பிரவீன் நாயர் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து விளக்கினர்.

# 'சிங்கப்பூரின் தந்தை' லீ குவான் யூ-வுக்கு மன்னார்குடியில் சிலை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



சிங்கப்பூர் தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து புதன்கிழமை நடைபெற்ற தமிழ் கலைப்பண்பாட்டு நிகழ்ச்சியில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

**சென்னை, மே 24:** 'சிங்கப்பூரின் தந்தை' எனப் போற்றப்படும் லீ குவான் யூ-வுக்கு தமிழகத்தின் மன்னார்குடியில் சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

சிங்கப்பூர் தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து தமிழ் கலைப் பண்பாட்டு நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வின் அங்கமாக, 'வேர்களைத் தேடி...' எனும் அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை தொடங்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

கடல் கடந்து சிங்கப்பூருக்கு வந்திருப்பதாக நான் நினைக்கவில்லை. தமிழ்நாட்டுக்குள் இருப்பதாகத் தான் நினைக்கிறேன். அந்த அளவுக்கு சிங்கப்பூர் எனது சிந்தைக்கு இதமான ஊராக அமைந்திருக்கிறது.

**லீ குவான் யூ:** சிறிய தீவாக இருந்த சிங்கப்பூரை மிகக் குறுகிய காலத்தில் உலகமே வியக்கும் வகையில், அதன் முன்னேற்றத்துக்கு வித்திட்டவர் லீ குவான் யூ. அவரது புகழ் இன்று வரை நீடித்து நிலைத்து இருக்கிறது. அவர் இந்தியாவுடனான வணிகத் தொடர்பை வளர்த்தார்.

'சிங்கப்பூரின் தந்தை' எனப் போற்றப்படும் லீ குவான் யூ-வால்தான் இங்கு தமிழர்கள் உயர்வு பெற்றனர்; தமிழும் உயர்வை அடைந்தது. எனவே, அவருக்கு தமிழ்நாட்டில் நினைவுச் சின்னத்தை எழுப்ப முடிவு செய்துள்ளோம். இது தமிழ்நாட்டில் மன்னார்குடியில் அமையவுள்ளது.

சிங்கப்பூரில் விசிக்கும் தமிழர்களில் பெரும்பகுதியினர் மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அங்குள்ள பரவாக்கோட்டை, கூப்பாச்சிக் கோட்டை, திருமக்கோட்டை, உள்ளிக்கோட்டை, மேலத்திருப்பாலக்குடி, கீழத்திருப்பாலக்குடி, ஆலங்கோட்டை, நெடுவாக்கோட்டை, மேலவாசல் உள்ளிட்ட கிராமங்களில் ஒவ்வொரு வீட்டுக்கும் சிங்கப்பூருடன் தொடர்பு உண்டு. இந்தக் கிராமங்களில் இருந்து வந்தவர்களே அதிகம்.

எனவே, லீ குவான் யூ பெயரால் நூலகமும் சிலையும் மன்னார்குடியில் அமையும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்த நிகழ்வில், சிங்கப்பூர் உள்துறை சட்ட அமைச்சர் கா.சண்முகம், தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் வெ.இறையன்பு, சிங்கப்பூரில் உள்ள தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.